ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2480/17 - 2026 මාර්තු මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.03.19
2480/17 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடு களின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்ட மீரிகமை பிரதேச செயலகப் பிரிவில், உடகஹபத்துவ சிறு பிரிவில், தென்ன கம என்ற கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட கம்/மீரி/2013/316 ஆம் இலக்கத்தை உடையதும் 2013.10.03 ஆந் திகதியுடையதுமான ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்டுள்ள பின்வரும் பெயர், விஸ்தீரணம் மற்றும் எல்லைகளைக் கொண்டுள்ள காணி:

01. **துண்டு ‘A’ – வெனிவெல்லவத்தை – விஸ்தீரணம்: 93.6050 ஹெக்டயார்**

வடக்கு: வீதி, எஸ். ஜி. நிமல் மற்றும் சிலர் உரிமை கோரும் மற்றும் ஏ.ஆர். அரனோலிஸ் மற்றும் சிலர் உரிமை கோரும் பெயர்களை தேடிக் கண்டு பிடிக்க முடியாதுள்ள காணி, டபிள்யூ. அரனோலிஸ், ஏ.டி.சி. சமீர மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் காணி மற்றும் பெயர்களை தேடிக் கண்டு பிடிக்க முடியாதுள்ள காணி மற்றும் மா ஓயா என்ற ஆறு; கிழக்கு: மா ஓயா ஆறு; தெற்கு: ஆர். எஸ். தரணியகல உரிமை கோரும் பெயர்களை கண்டுபிடிக்க முடியாதுள்ள காணி, வீதி, புகையிரத திணைக்களம் உரிமை கோரும் பெயர் தெரியாத காணி, எல்.பி. சோமரத்ன உரிமை கோரும் வெனிவெல்லவத்தை காணி, விக்ரமபால மற்றும் சிலர் உரிமை கோரும் வெனிவெல்லவத்தை மற்றும் வீதி; மேற்கு: வீதி மற்றும் ஈ.ஈ.அமரசிங்க உரிமை கோரும் பெயர் தெரியாத காணி.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4-3/4/2012/D/36.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகதமெதுர”,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, ஏப்பிறல் 09.

EOG 03 - 0157


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தின், பதுளை பிரதேச செயலக பிரிவின், ரில்பொல கோரளையின் சிறு பிரிவின், பதுளுபிடிய (78J) கிராம அலுவலர் பிரிவின், பதுளுபிடிய (பிரிவின் இலக்கம் - 8 மல்வத்த) (பதுளை மாநகர சபை எல்லைக்குள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயார்செய்யப்பட்ட இல. B/ACQ/BDL/2017/162 மற்றும் 2019.01.22 ஆம் திகதிய முன்னேற்ற முதற்சுவட்டின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணி துண்டின் எல்லை:

01. **துண்டு 'A' – குடாபெத்தகும்புர – விஸ்தீரணம்: 0.0126 ஹெக்டயார்**

வடக்கு: கங்கபட வீதி மற்றும் உரிமையாளரை தேட முடியாத குடாபெத்த கும்புர; கிழக்கு: உரிமையாளரை தேட முடியாத குடாபெத்த கும்புர; தெற்கு: உரிமையாளரை தேட முடியாத குடாபெத்த கும்புர; மேற்கு: கங்கபட வீதி மற்றும் உரிமையாளரை தேட முடியாத குடாபெத்த கும்புர.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4-3/9/2016/WS/556.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
"மிஹிகதமெதுர",
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, திசெம்பர் 19.

EOG 03 - 0158

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.